# தகவல் தாள்

## துணைவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை

இந்தத் தகவல் தாளில் *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ் துணைவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகை தொடர்பான தகவல்கள் உள்ளடங்குகின்றன.

திருமணமாகி விவாகரத்து செய்கின்றவர்களுக்கு *விவாகரத்துச் சட்டம்* பொருந்துகிறது. மாகாண அல்லது பிராந்திய சட்டங்கள், திருமணமாகாமல் கூடி வாழ்ந்து அல்லது பொதுச் சட்டத்தின் கீழ் கூடி வாழ்ந்து பிரிகின்றவர்களுக்கும் மற்றும் திருமணமாகி விவாகரத்து செய்யாமல் பிரிகின்றவர்களுக்கும் பொருந்துகின்றன.

### துணைவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை என்றால் என்ன?

துணைவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை என்பது விவாகரத்துச் செய்த பின்பு அல்லது பிரிந்த பின்பு துணைவர்களில் ஒருவர் மற்றவருக்கு அளிக்க வேண்டிய நிதி உதவித் தொகை ஆகும். சில நேரங்களில் இந்த உதவித் தொகை "ஜீவனாம்சம்" என்றோ அல்லது "பராமரிப்புத் தொகை" என்றோ அழைக்கப்படும். துணைவர்களுக்கு வழங்கப்படும் இந்த உதவித் தொகையானது வழக்கமாக மாதாந்திர அடிப்படையில் வழங்கப்படும், ஆனால், இதனை ஒட்டுமொத்தத் தொகையாகவும் வழங்கலாம்.

### துணைவரில் ஒருவர் மற்றொருவருக்கு உதவித் தொகையை ஏன் அவசியம் வழங்கவேண்டும் ?

*விவாகரத்துச் சட்டத்தில்* வரையறுக்கப்பட்டுள்ள துணவருக்கான ஆதரவு சார்ந்த ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நோக்கங்களை

துணவருக்கான உதவித் தொகை பூர்த்தி செய்யும் பட்சத்தில், ஒரு துணைவர் அந்த உதவித் தொகையை மற்ற துணைவருக்கு வழங்க வேண்டும். அத்தகைய நோக்கங்கள் பின்வருமாறு:

- திருமணம் செய்து வாழுகின்ற காலத்தில் வருமானத்தை சம்பாதிப்பதற்கான தனது ஆற்றலை தியாகம் செய்கின்ற ஒரு துணைவருக்கு நஷ்டஈட்டுத் தொகையை வழங்குதல்;
- எந்த ஒரு குழந்தைப் பராமரிப்பு தொடர்பான கடமைக்கும் மேற்பட்டு குழந்தைகளைத் தொடர்ந்து பராமரிக்கின்ற ஒரு துணைவருக்கு நஷ்டஈட்டுத் தொகையை வழங்குதல்; அல்லது
- திருமண முறிவின் காரணமாக நிதித் தேவை எழும் சூழ்நிலையில் உள்ள ஒரு துணைவருக்கு உதவி செய்தல்.

அதே நேரம், இந்த உதவித் தொகையைப் பெறுகின்ற துணைவர்கள் நியாயமான சூழ்நிலைகளில் சுயமாக ஆதரவைத் தேடிக்கொள்ளும் கடமையையும் கொண்டிருக்கிறார்கள்.

## **துணைவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை யார் கேட்டுப் பெற முடியும்**?

திருமணமான தம்பதியினர் விவாகரத்துச் செய்துகொள்ளும் நேரத்தில், அவர்களில் ஒருவர் *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ் உதவித் தொகையை வழங்குமாறு கோரலாம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், குறைந்த வருமானமுடைய துணைவரால் இந்த உதவித் தொகை கோரப்படுகின்றது. இந்த உதவித் தொகை வழங்கப்பட வேண்டுமா என ஒவ்வொரு வழக்கிலும் , நீதிபதி ஒருவர், பின்வருபவை உள்ளிட்ட பல்வேறு அமசங்களைக் பரிசீலிக்க வேண்டும்.

- துணைவர்கள் இருவரது நிதி சார்ந்த வருமானங்கள், தேவைகள் மற்றும் சூழ்நிலைகள்;
- துணைவர்கள் ஒன்றாக வாழ்ந்த கால அளவு;
- ஒவ்வொரு துணைவரும் அவரது திருமணத்தின் போது நல்கிய பங்களிப்புகள்;

- அத்தகைய பங்களிப்புகளால் விளைந்த பயன்கள் மற்றும் துணைவர்கள் இருவரின் தற்போதைய நிதி நிலைகளின் மீது இத்திருமண முறிவின் தாக்கம்;
- குழந்தைகள் இருப்பின், அந்தக் குழந்தைகளின் பராமரிப்பு தொடர்பான தொடர் பொறுப்புக்கள் ஏதேனும் இருந்தால்;
- துணைவருக்கான உதவித் தொகை தொடர்பாக முன்பு பிறப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஆணைகள், மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் அல்லது செய்ப்பட்டுள்ள ஏற்பாடுகள்.

## இந்தத் துணைவருக்கான உதவித் தொகை எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

இந்தத் துணைவருக்கான உதவித் தொகை கணக்கீடு என்பது குடும்பச் சட்டத்தின் மிகவும் சிக்கலான பிரிவுகளில் ஒன்றாகும். ஒவ்வொரு வழக்கிலும் நியாயமான மற்றும் பொருத்தமான ஒரு தொகையை நிர்ணயிக்கும் பொருட்டு பல அம்சங்கள் பரிசீலிக்கப்பட வேண்டும். துணைவருக்கான உதவித் தொகையைக் கணக்கீடு செய்ய பெரும்பாலான கனடிய நீதிமன்றங்களும், குடும்பச் சட்டத்திற்கான தொழில்முறை வல்லுநர்களும் *துணைவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை தொடர்பான ஆலோசனை வழிகாட்டுதல்களைப்* பயன்படுத்துகின்றனர். *குழந்தைப் பராமரிப்பு தொடர்பான மத்திய அரசின் வழிகாட்டுதல்கள்* போன்று *துணைவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை தொடர்பான ஆலோசனை வழிகாட்டுதல்கள்* என்பவை சட்டங்கள் அல்ல. இவை நீதிமன்ற ஆணைகளில் அல்லது நீதிமன்றத்திற்கு வெளியில் மேற்கொள்ளப்படும் தீர்வுகள் மற்றும் ஒப்பந்தங்களில் துணைவருக்கான பொருத்தமான உதவித் தொகைகளை கணக்கீடு செய்ய உதவி செய்கின்றன.

## துணைவர்களுக்கான உதவித் தொகையை நான் கணக்கீடு செய்வதற்கு, அது தொடர்பான ஆலோசனை வழிகாட்டுதல்களை நான் பயன்படுத்திக்கொள்ள முடியுமா?

*துணைவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை தொடர்பான ஆலோசனை வழிகாட்டுதல்களை* எவர் ஒருவராலும் ஆலோசனைக்காகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். எனினும், துணைவருக்கு வழங்கப்படும் உதவித் தொகையைக் கணக்கீடு செய்வது மிகவும் சிக்கலானது என்பதால், ஒரு குடும்பச் சட்ட வல்லுநரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

## வரி விதிமுறைகள் இந்த உதவித் தொகைக்கு எவ்வாறு பொருந்துகின்றன?

நீங்கள் வழங்கும் அல்லது உங்களுக்குக் கிடைக்கப்பெறும் இத்தகைய உதவித் தொகைகள் உங்களது வருமான வரி தாக்கலில் உள்ளடக்கப்பட வேண்டுமா அல்லது கழிக்கப்பட வேண்டுமா என்பதை நீங்கள் தீர்மானிக்க உதவி செய்யும் தகவல்களை கனடா வருவாய் முகமை கொண்டிருக்கிறது.

## துணைவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையையும் மற்றும் குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகையையும் நான் ஒரே நேரத்தில் வழங்க வேண்டுமா?

பல வழக்குகளில், துணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையையும் மற்றும் குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகையையும் ஒரேநேரத்தில் துணைவர்கள் வழங்குகின்றனர். எனினும், *விவாகரத்துச் சட்டம்* குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகைக்கு முன்னுரிமையளிக்கின்றது. துணைவர்களுக்கு வழங்கப்படும் இந்த உதவித் தொகையையும் மற்றும் குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகையையும் ஒரேநேரத்தில் வழங்குவதற்கு ஒரு நபரிடம் போதிய பணமில்லை எனும் பட்சத்தில்,

பணமானது முதலில் குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகைக்கு அளிக்கப்படும்.

## துணைவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை எவ்வளவு காலம் வழங்க வேண்டும்?

இந்த உதவித் தொகை வழங்கப்படும் காலமானது துணைவர்கள் ஒன்றாக வாழ்ந்த காலத்தின் அளவு, அல்லது அவர்கள் பிரிந்த நேரத்தில் அவர்களின் வயதுகள் போன்ற விஷயங்களின் அடிப்படையில் அமைந்திருக்கும். சில நிகழ்வுகளில், துணைவர்களுக்கு வழங்கப்படும் இந்த உதவித் தொகையானது ஒரு வரையறுக்கப்பட்ட கால அளவுக்கு மட்டும் வழங்கப்படலாம். வேறு சில நிகழ்வுகளில், சூழ்நிலைகளில் மாற்றம் ஏற்பட்டு அதனால் நீதிமன்றம் வேறுவிதமான ஓர் ஆணையைப் பிறப்பிக்காத பட்சத்தில் அல்லது ஒரு மாற்றத்தை உட்படுத்த ஒப்பந்தமானது புதுப்பிக்கப்படாத பட்சத்தில் துணவருக்கான உதவித் தொகை தொடர்ச்சியாக வழங்கப்படலாம்.

## துணைவருக்கு உதவித் தொகை வழங்குவதை என்னால் எப்போது நிறுத்தமுடியும்?

ஓர் எழுத்துப்பூர்வமான ஒப்பந்தத்தில் அல்லது நீதிமன்ற ஆணையில் வரையறுக்கப்பட்ட துணவருக்கான உதவித் தொகையை நீங்கள் வழங்கிக்கொண்டிருந்தால், பின்வரும் சூழ்நிலைகள் தவிர மற்ற நேரங்களில் நீங்கள் தொடர்ந்து இந்த உதவித்தொகையை வழங்க வேண்டும்.

- ஆணையானது நீதிமன்றத்தால் மாற்றப்பட்டால்;
- நீங்களும் உங்களது முந்தைய துணைவரும் உங்களுடைய ஒப்பந்தத்தை மாற்றுவதற்கு உடன்பட்டால்; அல்லது
- ஆணையில் அல்லது ஒப்பந்தத்தில் உதவித்தொகையை நிறுத்துவதற்கு வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால்

துணைவர்களில் ஒருவரின் சூழ்நிலையில் ஏற்படும் முக்கியமான ஒரு மாற்றத்தினால் நியாயப்படுத்தப்படுகின்ற நேரத்தில் மட்டுமே, ஒரு நீதிமன்றம் துணைவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை மாற்றக்கூடும். உதாரணமாக, துணைவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை வழங்கும் ஒருவர், உதவித் தொகை தொடர்பான ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்னர் அவரது வேலையை இழக்கும்பட்சத்தில் அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணையின் படி உதவித் தொகையை அவரால் மேற்கொண்டு வழங்க இயலமால் இருக்கும்பட்சத்தில், உதவித் தொகை தொடர்பான ஆணை மாற்றப்பட வேண்டும் என நீதிமன்றம் முடிவு செய்யக்கூடும்.

துணைவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை தொடர்பான ஒரு ஒப்பந்தம் உங்களுக்கும், உங்களுடைய முந்தைய துணைவருக்கும் இடையில் இருக்கும் பட்சத்தில், உங்கள் இருவரில் எவரேனும் ஒருவரின் சூழ்நிலையில் ஒரு மாற்றம் நிகழுமாயின், உங்களது புதிய சூழ்நிலையைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் நீங்கள் உங்களது ஒப்பந்தத்தை மாற்ற விரும்பலாம். எனினும், உங்களுடைய ஒப்பந்தத்தில் முன்மொழியப்படும் ஏதேனும் மாற்றங்கள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அத்தகைய மாற்றங்களுக்கு நீங்களும், உங்களுடைய முந்தைய துணைவரும் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

துணைவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை, குறிப்பிட்டவொரு நாளில் அல்லது ஒரு சில நிகழ்வின் போது முடிவடையும் என உங்களுக்கான ஆணை அல்லது ஒப்பந்தம் தெளிவாக எடுத்துரைக்குமாயின், அந்த நாளில் நீங்கள் உதவித் தொகை வழங்குவதை நிறுத்தலாம். உதாரணமாக, உங்களுக்கான ஆணையில் அல்லது ஒப்பந்தத்தில் குறிப்பாக துணைவருக்கான உதவித் தொகை 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 ஆம் தேதியில் முடிவடையும் என குறிப்பிடப்பட்டிருக்குமாயின், அந்தக் காலம் முடிவடைந்தவுடன் துணைவருக்கான உதவித் தொகை வழங்கும் உங்கள் பொறுப்பும் நீங்கி விடும்.

***விவாகரத்து மற்றும் பிரிதல் பற்றிய மேலும் பல தகவல்களை இலவசமாக  கனடாவின் நீதித்துறையிலிருந்து வரும் இந்தக் குறுகிய வீடியோவின் மூலம் அல்லது கீழ்க்காணும் எமது இணையதளத்தில் பிரவேசிப்பதன் மூலம் அறிந்துகொள்ளலாம்:***

***Canada.ca/family-law***

பொறுப்புத்துறத்தல்: இது ஒரு சட்ட நூல் அல்ல மற்றும்  இது சட்ட ஆலோசனையை வழங்காது. குடும்பச் சட்டம் சிக்கல் வாய்ந்தது என்பதால், தனிநபர்கள் வழக்கமாக குடும்பச் சட்டத்திற்கான ஒரு வழக்கறிஞரிடமிருந்து தங்களுடைய நிலைமை குறித்த ஆலோசனையைப் பெற்றுக்கொள்வது மிகச்சிறந்ததாகும். இந்த வழக்கறிஞர்கள், உரிமைகளையும், கடமைகளையும் பற்றிய சட்டரீதியான ஆலோசனையை வழங்குவதில் சிறந்தவர்களாக இருப்பார்கள். பெரும்பாலான மாகாண மற்றும் பிராந்திய வழக்கறிஞர் சங்கங்கள் பொருத்தமான வழக்கறிஞரைப் பரிந்துரை செய்யும் சேவைகளை வழங்குகின்றன. சில வழக்கறிஞர்கள் இலவசமாகவோ அல்லது குறைந்த கட்டணத்திலோ ஓர் ஆரம்பக்கட்ட சட்ட ஆலோசனையை வழங்கலாம் அல்லது தனிநபர்கள் தங்களது குறிப்பிட்ட சூழ்நிலையின் ஒரு சில அம்சங்கள் தொடர்பாக ஒரு சில நேரங்களில்  வழக்கறிஞர் ஒருவரைக் கலந்தாலோசிக்க முடிவு செய்யலாம்.